ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2292/35 - 2022 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2022.08.09
2292/35 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

(7 ஆம் பிரிவின் கீழான கட்டளை)

*2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 07ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகத்தின் சபையினால் ஆக்கப்பட்ட இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகத்தின் விதிகள்.*

பேராசிரியர் **நிரன்ஜனி இரத்நாயக்க,**
தலைவர், இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகம்.

கொழும்பு,
2022, ஓகத்து 12.

1A - PG 5926 — 08 (2022/08)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்களின் நிறுவகத்தின் விதிகள்

*2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை சுற்றாடலியல் தொழில்வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 07 (1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவை.*

*2259/7 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் 2021, திசெம்பர் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட மேற்படி அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது:*

*(1) 4.7 (ஏ) ஆம் பந்தி நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்பட்டுகின்றது;*

*(ஏ) வருடாந்த கணக்கு அறிக்கையைத் தயாரித்து, வருடாந்த பொதுக் கூட்டத்தில் (AGM) சமர்ப்பிப்பதற்காக ஒரு பட்டயக் கணக்காளரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும், மேலும் எந்தவொரு உறுப்பினரும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏதேனும் கேள்வி எழுப்பினால், அத்தகைய கேள்விக்கு பொருளாளர் பதிலளித்தல் வேண்டும்.*

*(1) 12 ஆம் பந்திக்கு பின்வரும் புதிய பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம்;*

*12.11 இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்களின் நிறுவகத்தில் (IEPSL) குறிப்பிட்டதொரு அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் உள்நாட்டு தொழில்வல்லுநர்களுக்கும் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமை அளவுகோலுக்கு உட்பட்டு உள்நாட்டு தொழில்வல்லுநர்களுக்கு அறவீடு செய்யும் கட்டணத்திற்கு மேலதிகமாக வருடமொன்றுக்கு 100 ஐ.அ.டொ. கட்டணத்திற்கு உட்பட்டு அங்கத்துவம் வழங்கப்படும். சம்மேளத்தின் தீர்மானத்தின் பிரகாரம் அங்கத்துவக் கட்டணம் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்படும்.*

*12.2 இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையைப் பெற்ற பின்னர், மேற்கூறியவற்றிற்கும் நிறுவகத்தின் வேறு பிற நோக்கங்களுக்காகவும் பொருத்தமான வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றை நிதியைப் பெறுவதற்கு இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்களின் நிறுவகம் (IEPSL) பொருத்தமான வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைத் திறக்க முடியும்.*

*(2) பின்னிணைப்பு ஆ 1 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வருவற்றை பதிலீடு செய்தல்;*

*(அ) உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், புவியியல், விவசாயம், பொறியியல், கட்டமைக்கப்பட்ட சுற்றாடல், சுற்றாடல் முகாமை அல்லது பிற தொடர்புடைய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்திலிருந்து முதல் பட்டம் மற்றும் மேற்படி தகைமைகளைப் பெற்ற பின்னர் சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம்.*

*(ஆ) சுற்றாடல் தொடர்பான துறையில் முதுகலைப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்திலிருந்து முதல் பட்டம் மற்றும் மேற்கூறிய தகைமைகளைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.*

*(இ) சுற்றாடல் தொடர்பான துறையில் முதுகலை டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்திலிருந்து முதல் பட்டம் மற்றும் மேற்கூறிய தகைமைகளைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருட அனுபவம்.*

*(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகத்தில் இருந்து சமமான கல்வி உள்ளடக்கத்துடன் கூடிய முதல் பட்டம் அல்லது தொழில்தேர்ச்சி தகைமை மற்றும் மேற்படி தகைமையைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருட அனுபவம்.*

(உ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்தில் சுற்றாடல் துறையில் முதுகலைப் பட்டம் மற்றும் மேற்கூறிய தகுதியைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட அனுபவம்.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்தில் சுற்றாடல் துறையில் முதுகலை டிப்ளோமா மற்றும் மேற்கூறிய தகைமையைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் ஏழு (07) வருட அனுபவம்.

(3) பின்னிணைப்பு ஆ 1 இல் 2.3 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வருவற்றை பதிலீடு செய்தல்;

(அ) உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், புவியியல், விவசாயம், பொறியியல், கட்டமைக்கப்பட்ட சுற்றாடல், சுற்றாடல் முகாமை அல்லது பிற தொடர்புடைய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்திலிருந்து முதல் பட்டம்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்தில் இருந்து ஏதேனுமொரு துறையில் முதல் பட்டம் மற்றும் சுற்றாடல் தொடர்பான துறையில் முதுகலை பட்டம்.

(இ) சுற்றாடல் தொடர்பான துறையில் முதுகலை டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்திலிருந்து முதல் பட்டம்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான கல்வி நிறுவகத்தில் இருந்து சமமான கல்வி உள்ளடக்கத்துடன் கூடிய முதற் பட்டம் அல்லது தொழிற்தேர்ச்சித் தகுதி மற்றும் மேற்கூறிய தகைமையைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட அனுபவம்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்தில் சுற்றாடல் துறையில் முதுகலைப் பட்டம் மற்றும் மேற்கண்ட தகைமையைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் ஐந்து (05) வருடத்திற்கும் குறைவான அனுபவம்.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிறுவகத்தில் சுற்றாடல் துறையில் முதுகலை டிப்ளோமா மற்றும் மேற்கூறிய தகைமையைப் பெற்ற பிறகு சுற்றாடல் தொடர்பான துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட அனுபவம்.

EOG 08- 0113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.